PRINCIPAL DISTRICT COURT, SALEM.

Probate OP.No.71/2021 – 7.3.2022

PW1 – சித்ராதேவி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த மனுவின் எதிர்மனுதாரர் இறந்துபோன என் கணவரின் தாயார் ஆவார். நான் தாக்கல் செய்துள்ள ஆவண எண்.4 ல் பாப்பாத்தி என்று என் மாமியார் பெயர் சொல்லப்பட்டுள்ளது. வாரிசுரிமை சட்டத்தின் அடிப்படையில் எனது மாமியாருக்கு மனு சொத்தில் பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. மனு சொத்தானது எனது கணவர் சுயமாக சம்பாதித்த சொத்தாகும். எனது கணவர் உயிருடன் இருக்கும்போது ரியல் எஸ்டேட் தொழில் மற்றும் வாழைக்காய் ஏற்றுமதி தொழிலும் செய்து வந்தார் என்றால் ரியல் எஸ்டேட் செய்யவில்லை. வாழைக்காய் ஏற்றுமதி மட்டும் செய்து வந்தார். நான் தாக்கல் செய்துள்ள முதல் பிரமாண வாக்குமூலத்தில் பாரா எண்.14 ல் எனது கணவர் உயிருடன் இருக்கும்போது ரியல் எஸ்டேட் செய்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் ரியல் எஸ்டேட் செய்து வந்ததால் அடிக்கடி பத்திரம் வாங்குவது மற்றும் அடிக்கடி கிரயம் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். எனது கணவர் டிப்ளமா கோர்ஸ் ஏதும் படித்துள்ளாரா என்றால் இல்லை. மசாஆ.1ல் என் கணவர் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். எனது

கணவர் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ளால் அவர் நன்கு எழுதபடிக்கத் தெரிந்தவர் என்றால் சரிதான். மசாஆ.1 உயில் ஆவணத்தில் முதல் பக்கத்தில் எனது கணவரின் கையெழுத்திற்கு மேல் பக்கத்தில் 2 வரிகள் எழுதுவதற்காக இடவசதி உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் மசாஆ.1 மற்றும் மசாஆ.4 ல் உள்ள எனது கணவரின் கையெழுத்தில் உள்ள இனிசியலும் மற்றும் NK என்ற எழுத்துக்களும் வெவ்வேறாக உள்ளது என்றால் அவ்வாறு இல்லை. என் கணவர் உண்மையிலேயே உயில் ஆவணம் ஏற்படுத்தியிருந்தால் அதை அவர் பதிவு செய்திருப்பார் என்றும் அந்த ஆவணத்தை அவர் எழுதி வைக்கவில்லை என்பதால்தான் அதை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர் கோவிட் 19 நோயால் பாதிக்கப்பட்டதால் பதை பதிவு செய்யாமல் விட்டிருக்கலாம். என் கணவருக்கு எழுத படிக்க தெரிந்திருப்பதால் உண்மையிலேயே உயில் மூலமாக எனக்கு சொத்தை கொடுப்பதற்கு விருப்பம் இருந்திருந்தால் அவரே தன் கைப்பட ஆவணத்தை எழுதி கொடுத்திருப்பார் என்றும் அவ்வாறு எழுதாததால் மேற்படி ஆவணத்தை அவர் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவர் மனதில் என்ன நினைத்துக்கொண்டிருந்தார் என்று எனக்கு தெரியாது. என் கணவருக்கு மனு சொத்தான வீடு மட்டும்தான் உள்ளது. வேறு எந்த சொத்தும் எனக்கு தெரிந்து இல்லை. என் கணவர் மசாஆ.1 ஐ எழுதி வைத்திருந்தால் அதில் இந்த மனு சொத்து விவரத்தை சொல்லியிருப்பார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி

அசாஆ.1 உயில் ஆவணத்தில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மசாஆ.1 ஆன உயிலில் உள்ள எனது கணவரின் கையெழுத்துகளில் உள்ள NK எழுத்துக்கள் மாறுபட்டு உள்ளதால் இந்த ஆவணம் போலியானது என்றால் சரியல்ல. மசாஆ.1 உயில் ஆவணத்தில் 2 வது பக்கத்தில் உள்ள வரிகள் சுருக்கி சுருக்கி எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு இல்லை. என் கணவர் ஏற்கனவே ரியல் எஸ்டேட் செய்து வந்ததால் அதற்காக அவர் ஸ்டாம்ப் பேப்பர்களை வாங்கி வைத்திருந்தார் என்றும் எனது மாமியாருக்கு மனு சொத்து செல்லக்கூடாது என்ற எண்ணத்துடன் வீட்டில் எனது கணவர் வைத்திருந்த முத்திரைதாள்களை நான் உயில் ஆவணமாக போலியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாமியாருக்கு ஒரு இடத்தை விற்று அதில் வந்த ரூ.4 லட்சத்தை அவருக்கு நான் கொடுத்துள்ளேன். அதனால் நான் மசாஆ.1 ஐ போலியாக தயார் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி வீதம் நான் என் மாமியாருக்கு ரூ.4 லட்சம் கொடுத்தற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் சாட்சிகள் உள்ளார்கள். முதல் விசாரணையில் என் கணவர் உயிருடன் இருக்கும்போது 2 முத்திரைதாள்கள் வைத்திருந்தார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அதில் ஒரு முத்திரைத்தாளை மசாஆ.1 ஐ தயாரிக்க பயன்படுத்திக்கொண்டேன் என்றும் மற்றொரு முத்திரைத்தாள் என் வசம் உள்ளது என்றால் சரியல்ல. எனது முதல் பிரமாண பத்திரிக்கையில் என் கணவருக்கு

மஞ்சள் காமாலை மற்றும் இருதய நோய் மற்றும் கோவிட் 19 ஆல் பாதிக்கப்பட்டிருந்தார் என்று சொல்லி உள்ள விவரங்களை எனது மனுவிலும் உயிலிலும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. ஆனால் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். என் கணவருக்கு கோவிட் 19 தவிர வேறு எந்த நோயும் இல்லை என்று சொன்னாலும் அதனால் அவருக்கு இந்த உயிலை எனக்கு எழுதி வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு 2015 ல் ஆஞ்சியோகிராம் ஆனது பெங்களூரில் நாராயணா மருத்துவமனையில் செய்யப்பட்டது. மேலும் என கணவருக்கு மஞ்சள் காமாலை நோய்க்கு கோயமுத்தூரில் ராயல் கேர் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் நாட்டு வைத்தியமும் மஞ்சள் காமாலைக்கு பார்க்கப்பட்டது. மேலும் என் கணவர் மூல நோயாலும் பாதிக்கப்பட்டிருந்தார். அதற்காக ஈரோடு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். உயில் மூலமாக என் கணவர் எனக்கு சொத்து கொடுக்க அவருக்கு எந்தவித ஆர்வமும் இல்லை என்றும் உயிலை நானாக போலியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் போலியானது என்று தெரிய வந்தால் குற்றவியல் நடவடிக்கை என் மீது எடுப்பதற்கு சம்மதமா என்றால் சம்மதம். மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- S.Kumaraguru,

Principal District Judge, Salem.